**தலைப்பு - 268 கிளிநொச்சி மாவட்ட செயலகம் / கச்சேரி**

---

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2013**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(i) பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தை சராசரி மட்டத்திற்கு கொண்டுவருதல்

- ❖ தேசிய அடையாள அட்டை சம்பந்தமான சேவைகள்
- ❖ நன்னடத்தைச் சான்றிதழ் மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்வற்றினை வழங்குதல்
- ❖ வேலைத் திட்டம் தொடர்பான நடவடிக்கைகள்
- ❖ சமய அலுவல்கள் உளமேம்பாட்டு அமைச்சின் ஆதரவுடன் சமய தலங்களை புனரமைப்பதற்கு வசதியளித்தல்

(ii) சொத்துக்களின் ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு.

(iii) வினைத்திறனான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நடவடிக்கைகள்

(iv) மஹிந்த சிந்தனை, பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(v) விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெல் முற்பணக் கொடுப்பனவு.

(vi) மாவட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள்.

(vii) மாவட்ட புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள்

(viii) இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் என்பவற்றிற்கான சேவைகளை வழங்கல்.

(ix) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களிற்காக உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றினைப் பராமரித்தல்.

(x) பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை வழங்கல் மற்றும் காணிப்பதிவு நடவடிக்கைகள்.

(xi) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கல்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) பூநகரி
(ஆ) கரைச்சி
(இ) பச்சிலைப் பள்ளி
(ஈ) கண்டாவளை

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 10 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுலப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புகளையும் தவிர்த்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பன திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

ஒன்பது சந்தர்ப்பங்களில் ரூபா 814,750 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழான பல்வேறு மீண்டெழும் செலவினத் தலைப்புகளின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டு கணக்குகளிற்குச் கொண்டுவரப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 201,587,867 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 197,456,286 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 4,131,581 அல்லது தேறிய ஏற்பாட்டில் 2.05 சதவீதம் இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 151,387,867 | 148,203,239 | 3,184,628 | 2.1 |
| மூலதனம் | 50,200,000 | 49,253,047 | 946,953 | 1.89 |
| **மொத்தம்** | **201,587,867** | **197,456,286** | **4,131,581** | **2.05** |

**(ii) பாதீட்டு முரண்**

- 12 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ஏற்பாடு ரூபா 6,860,000 ஆல் குறைக்கப்பட்டிருந்ததுடன் 11 செலவின விடயங்களிற்காக செய்யப்பட்ட ஏற்பாடு அதே தொகையால் அதிகரித்திருந்தது.

- செலவின விடயங்களிற்கு இடையிலான நிதி மாற்றங்களிற்காக திருப்திகரமான காரணங்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் சேமிப்புக்களிற்காக சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்கள் போதியதாக இருக்கவில்லை.

**(iii) நிதி ஏற்பாடுகளில்லாமல் மேற்கொள்ளப்பட்ட செலவினம்**

நிதியேற்பாடுகள் இல்லாமல் மாவட்ட செயலக தலைப்பு 268-1-1-0-1405 இற்கு ரூபா 148,500 செலவினம் தவறுதலாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. (2013 திசெம்பர் 30 இன் கொடுப்பனவு உறுதிச்சீட்டு இல: 2358) புள்ளவிபர கையேடு அச்சிடலிற்காக 2013 ஆம் ஆண்டின் போது வட மாகாண பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 200,000 தொகை பெறப்பட்ட போதிலும் நிதிகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(iv) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 13 அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 161,468,097 மற்றும் ரூபா

188,085,936 கொண்ட ரூபா 349,553,033 மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், முறையே ரூபா 148,025,333 மற்றும் ரூபா 178,026,072 கொண்ட ரூபா 326,051,405 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, முறையே ரூபா 10,058,864 மற்றும் ரூபா 13,442,764 கொண்ட ரூபா 23,501,628 தொகை ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. ஆதலால், கிடைத ஏற்பாடுகளின் 01 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான் சேமிப்புகள் உள்ளன.

➢ பின்வரும் செலவினங்களில் மிகைகள் அவதானிக்கப்பட்டன.

| **நிறுவனங்கள்** | **தலைப்பு** | **கிடைத்த ஏற்பாடு** | **ஏற்பட்ட செலவினம்** | **மிகை** |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் அலுவல்கள் அமைச்சு | 120 | 13,342,572 | 13,473,221 | 130,649 |
| உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் அமைச்சு | 181 | - | 198,864 | 198,864 |

➢ கரைச்சி மாவட்ட செயலகத்தால் தூய பால் விநியொகத்தில் எவ்வித தலையீடும் இன்றி ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு ரூபா 222,644 தொகையான விநியோகக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சால் வழங்கப்பட்ட 2012 சனவரி 16 ஆந் திகதிய 2012/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவிற்கு முரணாக இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

➢ மோட்டார் போக்குவரத்து திணைக்களம்.

(i) வாகன உரிமையாளர்களிற்கு இலக்க தகடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் 546 வாகனங்களின் இலக்க தகடுகள் வைக்கப்பட்டிருந்தன.

(ii) ஏறத்தாழ 4,000 எண்ணிக்கையான தற்காலிக வாகன அனுமதிப் பத்திரங்கள் உரிய விண்ணப்பதாரிகளிற்கு வழங்குவதற்குப் பதிலாக சாரதி பயிலுனர் பாடசாலைகளிற்கு முறையற்று வழங்கப்பட்டிருந்தது.

- தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

  ----------------------------------------------------------------

  பின்வருமாறு வாகனமொன்றை வாடகைக்கமர்த்தியதற்காக தனிநபரொருவருக்கு ரூபா 42,570 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| உள்ளபடியாக ஓடிய கி.மீ | உடன்படிக்கையின் படி வீதம் | செலுத்த வேண்டிய தொகை | செலுத்திய தொகை | மேலதிக கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2,968 | ஒரு கி.மீ இற்கு 41.25 | 122,430 | 165,000 | 42,570 |

**(இ) அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று**

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

26801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 16,000,000 | 8,225,326 | 6,000,000 | 9,646,302 | 57,000,000 | 40,905,866 |

- அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு இணக்கக் கூற்றின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தவை ரூபா 40,905,867 ஆனதுடன் அந்த நிலுவைகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது.

- மாவட்ட செயலகம் 2011 ஒக்தோபர் 20 ஆந்திகதிய பீடி/ஜீபிஎஸ்/ஏஏ/2001/எஸ் ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையுடன் இணங்காமல் ரூபா 3,064,000 தொகையான ஒன்று / இரண்டு ஆண்டு கடன்களை வழங்கியிருந்தது.

- மீளாய்வாண்டின் போது பதவி வறிதாக்கப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 699,195 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 05 அசையாத கடன் மீதிகள் தொடர்பில் ரூபா 760,135 தொகையான நிலுவையாகவிருந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் இருந்ததுடன் அந்த நிலுவைகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது.

**ஈ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 16,373,013 ஆனதுடன் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0000/00/0014/0000/000 | 16,373,013 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 நிறுவனங்களின் ரூபா 5,847,300 கூட்டு மொத்தத் தொகையான நெல் கொள்வனவு முற்பணங்கள் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

(ii) ரூபா 5,042,410 தொகையான தற்காலிக போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்குவதிலிருந்தான சேகரிப்புகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

## 1.6. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பொது நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய 2010 மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளிற்காக மாவட்ட செயலகத்தால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செலாற்றல் அறிக்கை மேற்குறிப்பிட்டபட்ட பந்தி 1.6.1 குறிப்பிடப்பட்ட அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதி மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய முறையே அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கங்கள் 402 மற்றும் 402(1) என்பவற்றின் படி நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் மாவட்ட செயலகத்தால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 செப்தெம்பர் 30 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்கு பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படாமை காரணமான மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அமுலாக்கல்

2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஐ/2000/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் குறிப்பிட்டதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூன்று கூட்டம் மாத்திரமே மாவட்ட செயலகம் நடாத்தியிருந்தது.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்திய சில சொத்துக்கள் இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| **சொத்துக்களின் வகுதி** | **அலகுகளின் எண்ணிக்கை** | **பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி** |
|---|---|---|
| (i) மோட்டார் வாகனங்கள் | 02 | 2 முதல் 04 ஆண்டுகள் |
| (ii) ஏனைய சொத்துக்கள் | 263 | 02 ஆண்டுகள் |

(ஆ) வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்தல்

நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்த வேண்டிய போதிலும் 95 கிராம சேவகர் அலுவலகங்களுக்கான 2013 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு நடாதப்பட்டிருக்கவில்லை.

(இ) பயிற்சியளித்தல் நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்காத கட்டிடம்

கண்டாவளையில் பயிற்சி நிலைய நிர்மாணத்திற்காக ரூபா 7,322,624 கூட்டு மொத்தத் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த கட்டிடம் குறித்த நோக்கத்திற்கு பதிலாக கண்டாவளை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் செயலகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**1.8 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| **திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | ரூபா | |
| (அ) **(i)**1999 ஏப்பரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | காசு மற்றும் களஞ்சியத்தினை கையாளும் உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii)2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் மீது நிலையான சொத்துப் பதிவேடுடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 17 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்காததுடன் சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. |
| (இ) கொள்வனவு வழிகாட்டல் | | |
| (i) 2.14.1 ஆம் பிரிவு | 1,200,000 | (அ)மகளீர் மற்றும் சிறுவர் பணியகத்திற்காக அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ)மகளீர் மற்றும் சிறுவர் பணியகத்திற்காக அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 05 இற்கும் குறைந்த மூடப்பட்ட கேள்விகள் கோரப்பட்டிருந்தது. |
| (ii) 3.12 ஆம் பிரிவு | | பிரேரிக்கப்பட்ட கேள்வியாளர்களின் தொழில்நுட்ப முகாமைத்துவம் மற்றும் நிதி இயலளவு, அவர்களுடைய பதவி |

| | | | |
|---|---|---|---|
| | | | தகைமைகள் மற்றும் மரபுவழி வரலாறு என்பவற்றின் மீது முதலில் தகைமைகளை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். இந்த வேண்டுகை கருத்திற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | (iii)3.4.2 ஆம் பிரிவு | | வழங்குநர் உத்தரவாதங்கள் மற்றும் உத்தரவாத அட்டைகளின் விபரங்களை கேள்விகளில் குறிப்பிட வேண்டும். அவை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv)3.9.1 ஆம் பிரிவு | 1,333,060 | ரூபா 1,333,060 தொகையான ஐந்து ஒப்பந்த வேலைகள் மாவட்ட செயலகத்தால் அனுமதிக்கப்படாத சங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்திய) அதிகாரச்சட்டம் 25(ஆ) ஆம் பிரிவு | | எழுத்துப் பரீட்சைக்கு தோற்றியிருக்க முடியாதிருந்த கல்வியறிவற்ற நபருக்கு வாய்மொழி பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 வங்கி கணக்கு செயற்பாடுகளில் குறைபாடுகள்

**செம்மையாக்கலுக்கான மீதிகள்**

மாவட்ட செயலகத்தால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட சீராக்கல்களின் பகுப்பாய்வில் வெளிப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சீராக்கப்பட்ட விபரங்கள்** | **காலப்பகுப்பாய்வு** | |
|---|---|---|
| | **06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைய** | **மொத்தம்** |
| | ரூபா | ரூபா |
| (i) வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 17,675 | 17,675 |
| (ii) இனங்காணப்படாத செலவுகள் | 735,670 | 735,670 |

## 1.10 மோசடித்தன்மையான பெறுமதி சேர்வரிக் கொடுப்பனவுகள் -ரூபா 470,668

ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்ட நேரத்தில் பெறுமதி சேரி வரி இலக்கத்தின் தகுதிக் காலம் மற்றும் பெறுமதி சேர் வரி பட்டியல் என்பவற்றினைப் பரீட்சிக்காமல் சிவில் வேலைகளிற்காக மாவட்ட செயலகத்தால் ரூபா 470,668 கூட்டு மொத்தத் தொகையான நான்கு பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. எனவே, இது தொடர்பில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மோசடித் தன்மையாக கருதப்பட்டது.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டத்தின் பல்வேறு திணைக்களங்களிற்கு விநியோகிப்பதற்கு 200 எண்ணிக்கையான புத்தகங்கள் போதியதாக இருந்த போதிலும் 300 எண்ணிக்கையான புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2014 ஏப்ரல் 21 வரை 190 புத்தகங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, ரூபா 49,500 தொகை பயனற்ற செலவினமாக கருதப்பட முடியும்.

## 1.12 நட்டங்களும் சேதங்களும்

ரூபா 72,963,466 கூட்டு மொத்தத் தொகையான தளபாடம், அலுவலக உபகரணங்கள், பொறியும் இயந்திரமும், கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் ஏனைய விடயங்களின் நட்டங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

-----------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செலயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 18 | 15 | 03 |
| மூன்றாம் நிலை | 14 | 01 | 13 |
| இரண்டாம் நிலை | 316 | 163 | 153 |
| ஆரம்ப நிலை | 100 | 48 | 52 |
| மொத்தம் | 448 | 227 | 221 |

2013 திசெம்பர் 31 வரை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள 221 எண்ணிக்கையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

*M*